

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஜோலார்பேட்டையில் மாவட்டச் செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற அண்ணா அறிவகம் (District Firewall) திறப்புவிழாவில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு திறந்து வைத்து, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் சி.என்.அண்ணாதுரை எம்.பி., அ.செ.வில்வநாதன் எம்.எல்.ஏ. மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

## கழக முப்பெரும் விழா 2025—பேரறிஞர் அண்ணா பிறந்தநாள்!

# இராணிப்பேட்டை மாவட்டத்தில் அனைத்து அணியினரும் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி வேண்டுகோள்!

இராணிப்பேட்டை. செப்.13-

செப்டம்பர் - 17 முப்பெரும் விழா, "பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள்" பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பிறந்த நாள், தமிழர்க்கான இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாள்!



சமுதாய நலன் காக்க, சமதர்மம் நிலைக்க, உயர்ந்தோர், தாழ்ந்தோர் எனும் நிலை மாற, அறிஞர் அண்ணா, தந்தை பெரியார் வழியில் கழகம் காத்த பெருந்தகை முத்தமிழ் அறிஞர் கலைஞர் கழகம் எனும் ஆலமரம் போல் பகுத்தறிவுச் சோலையாக பூத்துக் குலுங்கும் சூழலை உருவாக்கிட, கடந்து வந்த பாதைகளில் சந்தித்த சோதனைகள், வேதனைகள் கழக வரலாற்றைத் தொகுத்து, இன்றைய தலைமுறை அறிய திராவிட பாசறை கூட்டங்கள் தமிழகமெங்கும் இன்றைய இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை உண்டாக்க திராவிட கருத்துகள் பதிய கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களும், இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் ஆற்றும் அரும்பணி என்றும் திராவிடம் மறையாது, மறைக்கப்படாது, விதைத்தது வீரு கொண்டு எழும்.

எனவே 'திராவிட மாடல்' ஆட்சி காணும் கழகத் தலைவர் எண்ணமும் செயலும் எதிர்கால தி.மு.கவிற்கான கலங்கரை விளக்கமாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போற்றும் தலைவர் தி.மு. கழகத்தின் முதுபெருந்தலைவர் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் செப்டம்பர் 15 அன்று நமது மாவட்டத்திலுள்ள அனைத்து நகர, ஒன்றிய, பேரூர் மற்றும் ஊர்கிளை, உட்கிளை, வார்டு கிளைகள் தோறும் பேறறிஞர் அண்ணா அவர்களின் சிலைகளுக்கு திருவுருவ படங்களுக்கும் மாலை அணிவித்து, கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடி கேட்டுக்கொள்கிறேன்

எனவே, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, தொண்டரணி, வழக்கறிஞரணி, வர்த்தகரணி, நெசவாளரணி, ஆதிதிராவிட நலக்குழு, சிறுபான்மை நலப்பிரிவு, மருத்துவரணி, பொறியாளரணி, விவசாய அணி, விவசாய தொழிலாளரணி, மகளிர் தொண்டரணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணியினர், தொ.மு.ச, விளையாட்டு மேம்பாட்டு அணி, ஓட்டுநர் அணி, அயலக அணி, உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் அவரவர் பகுதிகளில் நிகழ்ச்சிகள் சிறப்பாக ஏற்பாடு செய்து முப்பெரும் விழாவை கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செப்டம்பர் 17 அன்று தந்தை பெரியார் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்தும் அன்று மாலை 04.00 மணி அளவில் கரூர், கோடாங்கிபட்டியில் நடைபெறும் தி.மு.கழக முப்பெரும் விழாவினையொட்டி ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற விருதுகளான,

- பெரியார்விருது கழக துணைப் பொதுச்செயலாளரும் - கழக நாடாளுமன்றகுழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கட்கும்,
- அண்ணாவிருது தணிக்கைக்குழு முன்னாள் உறுப்பினரும் - பாளையங்கோட்டை நகர் மன்ற முன்னாள் தலைவருமான சுப. சீத்தாராமன் அவர்கட்கும்,
- கலைஞர் விருது நூற்றாண்டு கண்டவரும் - அண்ணாநகர் பகுதி முன்னாள் செயலாளரும் - அண்ணாநகர் சட்டப்பேரவைத் தொகுதி முன்னாள் உறுப்பினருமான சோ.மா.இராமசந்திரன் அவர்கட்கும்,
- பேராசிரியர் விருது கழக ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவரும் - காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினரும் - சட்டப்பேரவை முன்னாள் கொரடாவுமான மருதூர் இராமலிங்கம் அவர்கட்கும்,
- மு.க.ஸ்டாலின் விருது ஒருங்கிணைந்த கோவை மாவட்ட முன்னாள் செயலாளரும் - முன்னாள் அமைச்சருமான பொங்கலூர் நா.பழனிச்சாமி அவர்கட்கும்,
- முரசொலிசெல்வம் விருது முரசொலி அறக்கட்டளை சார்பில் மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ். பன்னீர்செல்வம் அவர்கட்கும்,

மேற்கண்ட விருதுகளை முதல்வர், திராவிட மாடல் நாயகர், மக்களின் முதல்வர் கழக தலைவர், தளபதி அவர்களின் திருக்கரங்களால் வழங்கி சிறப்புரை நிகழ்த்த உள்ளார். என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர், அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

# கரூர் - கழக முப்பெரும் விழாவில் திரளாகப் பங்கேற்போம்!

## வேலூர் மாநகர தி.மு.க. செயற்குழுவில் தீர்மானம்

வேலூர், செப்.13-

வேலூர் மாநகர திமுக அவசர செயற்குழு கூட்டம் மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில் நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

இந்த இயக்கத்தை உருவாக்கி நமக்கெல்லாம் கடமை கண்ணியம் கட்டுப்பாடு ஆகியவற்றை கற்றுத் தந்து தாழ்ந்து இருந்த தமிழகத்தை தலை நிமிரச் செய்து நம்முடைய மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டி நம்மையெல்லாம் ஆளாக்கிய தென்னாட்டு பெர்னாட்ஷா பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் 15 என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அந்நாளில் காலை 10 மணி அளவில் வேலூர் மாநகர திமுக அலுவலகத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து பிறகு அங்கிருந்து ஊர்வலமாக புறப்பட்டு வேலூர் பழைய மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பேரறிஞர் அறிஞர் அண்ணா முழு உருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து இனிப்புகள் வழங்கப்பட உள்ளது. மேலும் வேலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதி கழகங்கள், வட்டக் கழகங்களில் பேரறிஞர் அண்ணாவின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து தங்களால் இயன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கிடுமாறு அனைவரையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

வரும் 17/9/2025 அன்று காலை 10 மணி அளவில் வேலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அமைந்துள்ள பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட உள்ளது .

எனவே இவ்விரு நிகழ்ச்சிகளிலும் மாநகரக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி கழக செயலாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பி.எல்.ஏ2, பிடிஏ மற்றும் பிசி.ஏ ஆகியவர்களைகொண்டு அனைத்து வாக்குச்சாவடிகளிலும் உறுதிமொழி ஏற்றுக்கொள்ள வேண்டும் என இக்கூட்டம் அனைவரையும் கேட்டுக்கொள்கிறது.

தலைமை கழகத்தின் சார்பில் ஆண்டுதோறும் முப்பெரும் விழா நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம். இவ்வாண்டு 17/9/2025 அன்று கரூரில் நடைபெறும் முப்பெரும் விழா நிகழ்ச்சியில் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

செப்டம்பர் 15 அண்ணா பிறந்தநாள் அன்று ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்" என்ற தலைப்பில் உறுதிமொழி ஏற்க வேண்டும் என அறிவித்துள்ளார்கள். எனவே ஓரணியில் தமிழ்நாடு மூலம் புதிதாக சேர்ந்துள்ள உறுப்பினர்கள் மற்றும்

பி.எல்.ஏ. 2 பி.டி.ஏ. மற்றும் பி.சி.ஏ. ஆகியவர்களை கொண்டு அனைத்து வாக்குச்சாவடிகளிலும் உறுதிமொழி ஏற்றுக்கொள்ள வேண்டும் என இக்கூட்டம் அனைவரையும் கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் இங்கு உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிடும் வகையில் அண்மையில் ஜெர்மன் மற்றும் யூகே நாடுகளுக்குச் சென்று அந்நிய முதலீடு ரூபாய் 15 ஆயிரம் கோடிக்கு மேல் பெற்று தந்த தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த கூட்டத்தில் நெஞ்சார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



திருப்பத்தூர் மாவட்டம் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சௌளூர் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக்கடையை அ. நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

# தமிழ்த் தாயின் தலைமகன் பிறந்த நாள்!



தமிழுக்கு ஏற்றம் தந்த, தமிழ்நாட்டிற்கு மாற்றம் தந்த தமிழ்த் தாயின் தலைமகன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் 15.

"மரம் இருக்கிறதே அதன் அடிப்பகுதிதான் மரத்தை தாங்கிப் பிடிக்கிறது. ஆனால் அடிமரத்தில் பூ இருக்காது, பழம் இருக்காது. நுனி மரம் பூத்துக் குலுங்குகிறதே என்று அடிமரம் வருத்தப்படுவதில்லை. அடிமரமாவது கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால், அந்த அடிமரத்தையும் தாங்கிப் பிடிக்கும் வேர்கள் கண்ணுக்குத் தெரியாமல் மண்ணுக்குள் மறைந்து கிடக்கின்றன" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் மாபெரும் மக்கள் இயக்கம் இன்று பரந்து, விரிந்து, பூத்துக் குலுங்குகிறது என்றால் , அதற்குக் காரணம் , எவ்வித எதிர்பார்ப்புமின்றி கண்ணுக்குத் தெரியாமல் வேர்கள் போல கழகத்திற்காக உழைக்கும் கோடானு கோடி கழகத் தொண்டர்கள்.

1967 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ்நாடு என பெயர் சூட்டியது, ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி, இருமொழிக் கொள்கை, சுயமரியாதைத் திருமணம், பேருந்துகளில் திருக்குறள் பொறிப்பு, புன்செய் நிலங்களுக்கு நில வரி ரத்து, இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு, ஸ்ரீ என்ற வடமொழிச் சொல்லுக்கு பதில் திரு எனும் தமிழ்ப் பெயர் என குறுகிய காலத்தில் அதிக சாதனைகளை நிகழ்த்தினார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு, அவர்கள் வழியில் திமுக ஆட்சியை நான்கு முறை அமைத்த பெருமைக்குரியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞர் என்ற பெயரை உச்சரிக்காமல் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றை எழுத முடியாது என்ற அளவுக்கு பொற்கால ஆட்சியை தமிழக மக்களுக்கு வழங்கிய பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சாரும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மறைவிற்குப் பிறகு தமிழ்நாட்டில் மீண்டும் கழக ஆட்சியை மலரச் செய்த பெருமை தளபதி ஸ்டாலின் அவர்களையே சாரும். பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துக் கொடுத்த பாதையில், தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி என்பதற்கேற்ப, நான் முதல்வன் திட்டம், தவப்புதல்வன் திட்டம், மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், உங்களுடன் முதல்வர் திட்டம், தாயுமானவர் திட்டம், புதுமைப் பெண் திட்டம் என பல்வேறு திட்டங்களைத் தீட்டி மக்கள் மனங்களில் நீக்கமற இடம் பிடித்துள்ளார் முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள்.

**டாக்டர் வா. மைத்ரேயன்**
நாடாளுமன்ற மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆணிவேர் மாநில சுயாட்சி. ஒன்றியத்தில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பதற்காக தொடர்ந்து அழுத்தம்திருத்தமாக குரல் கொடுத்து வரும் தலைவர் நம் தளபதி அவர்கள்.

"பணத்தால் இயங்க வேண்டிய நிலையிலுள்ள இயக்கம் பணக்காரர்களின் இயக்கமாகி விடும். அங்கே தியாகமும் தொண்டுணர்வும் பின்னுக்குத் தள்ளப்படும். சுழல் சொல்லர்களும், தன்னலங்களும் தலைமையேற்று விடுவர்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். இன்று அந்த நிலமைக்குச் சென்றுவிட்டது எதிர்க் கட்சியான அ.இ.அ.தி.மு.க. சேர்த்து வைத்த பணத்தை பாதுகாக்க கொத்தடிமையாக அந்தக் கட்சி மாறி விட்டது. அந்த கட்சிக்கான தலைமையகம் டெல்லிக்குச் சென்று விட்டது. இவர்களுடைய இந்த நடைமுறை தமிழ் நாட்டில் எடுபடாது.

ஒருமுறை பேரறிஞர் அண்ணா அவர்கள் பொதுக் கூட்டத்தில் ஒலிபெருக்கி மூலம் பேசிக் கொண்டிருந்தார். ஆனால் பெரும்பாலான தொண்டர்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் முகம் தெரியவில்லை. உடனே ஒரு தொண்டர் ஓடிப்போய் ஒரு பெட்டியை கொண்டு வந்து போட்டு, அதில் நின்று பேசுமாறு அண்ணாவை வேண்டினார். உடனே அண்ணா அவர்கள் அந்தப் பெட்டியின் மீது ஏறி நின்று "தொண்டர்களால் உயர்ந்தவன் நான்" என்று பேச ஆரம்பித்தார். பேரறிஞர் அண்ணா அவர்களின் வழிவந்துள்ள நம் முதலமைச்சர் அவர்கள் இன்று அந்த நிலையை அடைந்துள்ளார்கள்.

கடந்த எழுபத்தைந்து ஆண்டுகால தமிழ்நாட்டு அரசியலில் மாபெரும் மாற்றத்தை உருவாக்கிய முக்கியமான தலைவர்களில் முதன்மையானவர் பேரறிஞர் அண்ணா.

1960 -70 களில் மாணவப்பருவத்தில் இருந்தவர்களிடம் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது இந்தித் திணிப்புக்கு எதிரான மொழிப்போராட்டம். அவர்களில் நானும் ஒருவன்.

1962-68-ல் கிழக்குத் தாம்பரம் தேசிய உயர்நிலைப் பள்ளியில் 3- 8 வகுப்பு மாணவனாக இருந்த போது அந்த மொழிப் போரின் தீவிரத்தை நேரடியாக பார்த்தவன்.

அந்த காலகட்டத்தில் மொழிப் போராட்டத்தை முன்னின்று நடத்திய அண்ணா தனது மந்திரப் பேச்சால் மக்களை கட்டிப்போட்டார்.

1967-ல் பேரறிஞர் அண்ணா முதலமைச்சர் ஆன பிறகு 1968ல் நாகபுரிக்குச் சென்றேன்.

1969 பிப்ரவரி 3-ம் தேதி அண்ணா அவர்கள் மறைந்தது என்னை மிகவும் பாதித்தது. இரண்டு நாட்கள் அழுதுகொண்டே இருந்தேன் ஏதோ எனது குடும்பத்தில் ஒருவர் இறந்தது போல.

என் தகப்பனார் நாக்பூர் டைம்ஸ் என்ற நாளிதழில் உதவி ஆசிரியராக இருந்ததால் நாடு முழுவதிலும் இருந்து வரும் நாளிதழ்களில் அண்ணாவின் மறைவு பற்றிய செய்தி வந்த அனைத்து பத்திரிகைகளையும் சேகரித்து இன்றும் பொக்கிஷமாக பாதுகாத்து வருகிறேன்.

13 வயதில் அப்போது நான் கவிதை என்ற பெயரில் கிறுக்கியது இதோ:

**"மண்ணில் மக்கள் நலம் கொள்ள**
**விண்ணில் தேவர்கள் வாழ்த்தொலிக்க**
**கண்ணின் இமை போல் காஞ்சியிலே**
**அண்ணனும் தோன்றினர் அற்புதமாய்**

**இளமையில் படிப்பு அவரிடத்தில்**
**வளமைப் பொலிவுடன் தோன்றியதாம்**
**இச்சையுடனே அவருமே**
**பச்சையப்பனில் படித்தனராம்.**

**பெரியாருடனே முரண்பட்டு**
**அரியார் சிலருடன் அண்ணனுமே**
**திராவிட நாடென்ற கொள்கையுடன்**
**திமுகவையும் நிறுவினராம்.**

**பதினைந்து ஆண்டுகள் வளர்த்து அதற்கு**
**புத்துணர்ச்சியும் ஊட்டினராம்**
**அறுபத்தேழில் அரியணை அமர்ந்து**
**எண்பது சாதனை புரிந்தனராம்.**

**பட்ட மரமென மாடு வீழ்ந்தது**
**துளிர் விட்ட மரமென சூரியன் மலர்ந்தான்**
**முதல்வராகப் பணி புரிந்தார்**
**தவப் புதல்வரான அறிஞர் அண்ணா.**

**புற்றுநோயும் அவரை மற்றிரு**
**ஆண்டில் ஆட்கொண்டதாம்**
**மூன்று பிப்ரவரியில் உயிர் நீத்தனராம்**
**மிரண்டது நமது சென்னையுமே.**

**அகில உலகமும் அலறியதாம்**
**மக்களும் கண்ணீர் விட்டனராம்**
**அந்தோ அவர் அமரரானார்**
**அந்தோ அவர் துயிலுற்றார்.**

**இருப்பினும் அவர் குணம் சிறந்ததுவாம்**
**யார் மறுப்பினும் அவரே சிறந்தவராம்**
**அறிஞர் அண்ணா வாழ்க!**
**அமரர் அண்ணா வாழ்க! "**

அண்ணா மறைந்து அரை நூற்றாண்டுக்கு மேல் ஆனாலும் தமிழ் கூறும் நல்லுலகம் அவரை என்றும் நினைவில் நிறுத்தி இருக்கும்.

முன்னெப்போதையும் விட இப்போது தான் அவரது தேவை தமிழ்நாட்டிற்கு அதிகமாக இருக்கிறது…

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இன்றைய அரசியலில் முன்பை விட அதிகம் தேவை.

மாநில உரிமைக்காக ஓங்கி ஒலிக்க வேண்டிய குரல் அதிகம் தேவை.

தமிழ், தமிழர், தமிழ்நாடு இதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தேவை அதிகமாக உள்ளது.

"இலட்சியம் வெற்றி பெற வேண்டுமானால் அந்த இலட்சியத்தின் நியாயத்தை விளக்கி விட்டால் போதாது. அந்த இலட்சியத்திற்கு பலத்தையும் சேர்த்தாக வேண்டும். ஏனெனில் எவ்வளவு நியாயமான இலட்சியமும் பலத்துடன் கூட இருந்தாலொழிய வெற்றி பெற முடியாது " என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கூற்றுப்படி கழகம் மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் சாதனைகள் நிச்சயம் வலு சேர்க்கும்.

2026 ம் ஆண்டு பொதுத்தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்று திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சி அமைக்கும். இதன்மூலம் தமிழ்நாடு தழைக்கும், தமிழ்நாட்டு மக்கள் செழிப்பார்கள்.